திருமுழுக்கின் போது நாமும் கடவுளின் பிள்ளைகளாக அழைக்கப்படுகிறோம், மேலும் அன்பான விண்ணகத்தந்தை நம்மைக் காப்பாற்ற வந்தார் என்பதை ஈஸ்டர் உறுதிப்படுத்துகிறது.

நம்முடைய எதிர்காலத்திற்கான வாக்குறுதியை வழங்குவது மட்டுமல்லாமல், இயேசு நமது இறுதி நம்பிக்கையாகவும் இருக்கிறார். இதற்கு நேர்மாறாக போர், மாறிவரும் பாலின அடையாளம், மனநலம், மற்றும் ஆன்மீக வேதனை, முன்னேறிக்கொண்டிருக்கும் செயற்கை நுண்ணறிவு உலகின் வாய்ப்புகள், மற்றும் அதன் ஆபத்துகள், புதிய நிதிவாழ்க்கை முறை போன்றவற்றுக்கு மத்தியில் நாம் வாழ்கிறோம். இயேசு நமக்கு இன்னும் ஒரு பெரிய மற்றும் ஆழமான ஒன்றை வழங்குகிறார். பாஸ்கா உயிர்ப்பின் பலன்களை, அமைதியின் வாக்குறுதியை அவர் நமக்கு வழங்குகிறார். இந்த அமைதி உறுதியானது. உண்மையானது சமாதானத்தின் வாக்குறுதி நம்மை ஒளியில் நடக்கத் தூண்டுகிறது. ஏனென்றால் , நாம் இந்த மகத்தான ஒளியின் குழந்தைகளாக மாறுகிறோம். உயிர்ப்பின் ஞாயிறு நம்மை வாழ்க்கையின் புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்துடன் மாட்சியான சிலுவையை எதிர்கொள்ளத் தூண்டுகிறது. நமக்கு ஒரு எதிர்நோக்கு உண்டு. ஒரு இலக்கு உண்டு. நம்மைக் காப்பற்றவும் நம்மைத் தமக்குரியவர்கள் என்று உரிமை கொண்டாடவும் வருகின்ற கடவுள் உண்டு.

உயிர்ப்பின் செய்தி நம்முடன் எவ்வாறு பிண்ணிப் பிணைந்துள்ளது என்பதை நாம் சிந்திப்போம். நாம் உயிர்ப்பின் பிரதிபலிப்பா? இந்தச் செய்தியை நம் வார்த்தையிலும் செயலிலும் பகிர்ந்துகொள்கிறோமா? கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் நம் வாழ்வில் என்ன மாற்றத்தைக் கொண்டுள்ளோம்? இயேசு நம்மை அவரின் சீடர்களாகவும் நம்பிக்கையின் சகோதர சகோதரிகளாகவும் மாற்ற விண்ணகத்திலிருந்து மண்ணகம் வந்தார். அவரின் தெய்வீக இரத்தம் நாம் அவருடையவர்கள், அவருக்கு மட்டுமே உரியவர்கள் என்பதைக் காட்டும் அடையாளமாக உங்களுக்காகவும் எனக்காகவும் சிந்தப்பட்டது. உயிர்ப்பு, இந்த உலகை மாற்றியது. ஈஸ்டர், வாழ்க்கையின் பயணத்தை முற்றிலுமாக மாற்றியது. நமது நம்பிக்கையின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளும் உற்சாகம் நிறைந்த ஈஸ்டர் மக்களாக மாறுவோம்.

அனைவருக்கும் ஆவியில் நிறைந்த மகிழ்ச்சியான ஈஸ்டர் வாழ்த்துகள்!

மரித்த ஆன்மாக்கள் இறந்தோரிடமிருந்து நிலைவாழ்வுக்குச் செலும்படி, மரணத்தின் மீது ஒரு பாலமாக உமது சிலுவையை வைத்த உமக்கே மாட்சி உண்டாவதாக.

*சிரியாவின் புனித எஃப்ரெம்*

**இன்றைய இறைவார்த்தை:**

திரு.ப 10: 34, 37-43

திருப்பாடல்: 118: 1-2, 16-17, 22-23

கொலோசையர் 3: 1-4 (அ)
1 கொரிந்தியர் 5: 6-8

யோவான் 20:1-9 (அ)
லூக்கா 24: 1-12

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் பாஸ்கா ஞாயிறு | 20 ஏப்ரல் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

அல்லேலூயா




# ஈஸ்டர்
## அமைதிக்கான வாக்குறுதி

அல்லேலூயா

மாட்சிமிக்க நாள்- உலகை முழுமையாக மாற்றிய நாள்- அதைத் தான் நாம் இன்று கொண்டாடுகிறோம். பாவம் தெய்வீக உறவைத் துண்டித்தது. மனிதகுலத்தை மீட்டெடுக்க இயேசு வந்தார். நம்முடைய பிடியிலிருந்து நழுவிய நிலைவாழ்வை இயேசு மீட்டெடுத்து அதை என்றென்றைக்கும் நிலைநாட்டினார். இறைவேண்டல் இல்லத்திலும், கடவுளின் பீடத்திலும் கடவுள் முன்னறிவிக்கப்பட்டார். தந்தையிடம் செல்வதற்கு, தனிப்பட்ட நுழைவாயிலான தந்தையால் அனுப்பப்பட்டவர் புதிய ஆதாம். மானிடமகன் ஆண்டவராகவும், கடவுளாகவும் மீட்பராகவும் ஆனார். மகதலா மரியா, புனிதர்கள் பேதுரு மற்றும் யோவான், கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் மீது தீடிரென்று பொழியப்பட்ட இந்த நம்பிக்கையை உணர்ந்தார்கள்.